# NEOTS - தமிழோடு விளையாடு 2018

## பிரிவு - தளிர் (SubJuniors)

## போட்டி - குழந்தைப் பாட்டு

Choose one of the song from below

1) சொல் ஒன்று பொருள் இரண்டு
2) வண்ண வண்ணப் பூக்கள்

1) சொல் ஒன்று பொருள் இரண்டு

மாலை மாலை மாலை

மலர்கள் ஒன்றாய்ச் சேர்ந்தால் மாலை

மகிழ்வாய் ஆடும் நேரம் மாலை

ஆடு ஆடு ஆடு ஆடு

அழகுத் தமிழில் பாடி ஆடு

அங்கே புல்லை மேய்வது ஆடு

ஆறு ஆறு ஆறு ஆறு

அழகாய் தண்ணீர் ஓடிடும் ஆறு

அன்புத் தோழி வயது ஆறு

நாடு நாடு நாடு நாடு

நல்ல நண்பன் நட்பை நாடு

நமது நாடு பாரத நாடு

2) வண்ண வண்ணப் பூக்கள்

மல்லிகை மல்லிகைப் பூவே எங்கே போறீங்க

மஞ்சள் சாமந்தி பூத்துச்சான்னு பார்க்கப் போறேங்க

சாமந்திப் பூவே சாமந்திப் பூவே எங்கே போறீங்க

வெள்ளைத் தாமரை பூத்துச்சான்னு பார்க்கப் போறேங்க

தாமரைப் பூவே தாமரைப் பூவே எங்கே போறீங்க

சிவப்பு ரோஜா பூத்துச்சான்னு பார்க்கப் போறேங்க

ரோஜாப் பூவே ரோஜாப் பூவே எங்கே போறீங்க

பூத்த பூவாய் பறிச்சி உனக்குச் சூட்ட போறேங்க